

திருவல்லிக்கேணி பகுதி அவைத் தலைவர் மறைந்த க.வே.செழியனின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளையொட்டி ஒன்றிய முன்னாள் அமைச்சர் தயாநிதி மாறன் எம்.பி. நல உதவிகள் மற்றும் மதிய உணவு வழங்கினார். பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், கவுன்சிலர் கமலா செழியன், வட்டச் செயலாளர் க.வே.மோகன் உள்ளிட்டோர் உடனுள்ளனர்.

ஆந்திரம், தெலங்கானா கனமழை:

# 20 ரயில்கள் ரத்து!

ஆந்திரா,செப்.2–

ஆந்திரம் மற்றும் தெலங்கானாவில் பெய்து வரும் தொடர் கனமழை காரணமாக 20 ரயிகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

ஆந்திரம் மற்றும் தெலங்கானா மாநிலங்களில் தொடர் கனமழை பெய்து வருவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக விஜய்வாடாவுக்குட்பட்ட அம்பாபுரம், நைனாவரம், நுன்னா, பதப்பாடு ஆகிய பகுதிகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. குடியிருப்பு பகுதிகளை வெள்ளம் சூழ்ந்ததால் அப்பகுதியில் இருந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் காவல் துறை மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் குழுவினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே ஆந்திரம் மற்றும் தெலங்கானா மாநிலங்களில் பெய்து வரும் தொடர் கனமழையால் 20 ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை! சென்னையில் நடைபெறும்

# கழக முப்பெரும் விழாவில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்போம்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! டி.ஜெ.கோவிந்தராஜன் அறிவிப்பு!

திருவள்ளூர், செப்.2–

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் மாவட்டக் கழக அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் தச்சூர் கூட்டுரோட்டு எல்.கே.எஸ் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. தலைமை செயற்குழு உறுப்பினர் ஜெ.மூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர்கள் மு.கதிரவன், கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, எம்.எல். ரவி, மாவட்டப் பொருளாளர் எஸ். ரமேஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.வி.ராமமூர்த்தி, பா.செ.குணசேகர், பி.வெங்கடாசலபதி, டாக்டர். பரி



மளம் விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் இ.ஏ.பி.சிவாஜி, சி. எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின் ஆகியோர் பங்கேற்று பேசினர். சோழவரம் வடக்கு ஒன்றிய செயலாளர் நா.செல்வசேகரன் வரவேற்புரையாற்றினார்.

ஒன்றிய செயலாளர்கள் மு.மணிபாலன், டி.கே.சந்திரசேகர், பா.சுகுமாறன்,, எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ், ஆ.சத்தியவேலு, கி.வே.ஆனந்தகுமார், கா.சு.ஜெகதீசன் பொன்னுசாமி (எ) ஜான், ந.பரிமளம், நகர செயலாளர் ஜி.ரவிக்குமார், பேரூர் செயலாளர்கள் இரா.அறிவழகன், பி.முத்து, அபிராமி குமரவேல், க.சு.தமிழ்உதயன், அத்திப்பட்டு ஜி.ரவி,

மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கே.வி.லோகேஷ், எம்.முரளிதரன், இரா.கதிரவன், வெற்றி (எ) ராஜேஷ், டி.ஜெ.ஜி.தமிழரசன், மு.பாஸ்கரன், கே.ஆறுமுகம், பழவை முகமது அலவி, பா.தனசேகர், கா.சம்பத், ஜி.சுமன், ஜி.பி.வெங்கடேசன், ஏ.கே.சம்பத்குமார், எஸ்.கோபி, வி.பி.ரவிக்குமார், என்.வில்சன் நீலவழகன், மு.தினகரன், எம்.ஆர். ஸ்ரீதர், ஜி.ரமேஷ், எஸ்.ரோஸ்பொன்னையன், டி.மணி, கோல்டு. மணிகண்டன், தேசராணி தேசப்பன், ஜெயலலிதா சசிதரன், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அனைத்து மாவட்ட அணிகளின் தலைவர்கள், துணைத்தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறை வேற்றப்பட்டன. மறைந்த கழகத் தோழர்களுக்கு அஞ்சலி செலுத்தி இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**கழகத்தின் தொடர் வெற்றி**

2021-ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழக சட்டமன்ற தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குச் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மக்கள் விரோத அரசை அகற்றிட தமிழ்நாடு முழுவதும் சுற்றுபயணம் மேற்கொண்டு வேட்பாளர்களை வெற்றிச் பெற செய்து தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி அமைந்திட அரும்பாடுபட்ட கழக தலைவர் அவர்களுக்கும், 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற 18வது மக்களவை தேர்தலில் பாசிச, மதவெறி கொண்ட மக்கள் விரோத ஒன்றிய அரசை அகற்றிட 40 பாராளுமன்ற தொகுதிகளிலும் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து சூறாவளி பயணம் மேற்கொண்டு 40/40 வெற்றி பெற செய்த கழகத் தலைவர் அவர்களுக்கும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

மேலும் 2021 சட்டமன்ற தேர்தல் 2024 நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளர்களை ஆதரித்து ஒற்றை செங்கல் கொண்டு ஒன்றிய அரசை வீழ்த்த அல்லும் பகலும் ஓயாமல் பிராச்சரம் செய்து கழக தலைவர் தமிழக முதல்வர் அவர்களுக்கு உறுதுணையாக கட்சியிலும் ஆட்சியிலும் துடிப்போடு பணியாற்றுகின்ற மாநில இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை தமிழக துணை முதல்வராக்க வேண்டுமென மாவட்ட தி.மு.கழக பணிவோடு கேட்டுக் கொண்டு தீர்மானிக்கிறது.

தமிழ்நாட்டின் பொருளாதார மதிப்பு ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்தும் இலக்கை நிர்ணயித்து பயணித்துக் கொண்டிருக்கும் நம் கழகத் தலைவர் அமெரிக்க நாட்டிற்குச் சென்று பல்வேறு முக்கிய நிறுவன முதலீட்டாளர்களை சந்தித்து தமிழகத்தில் தொழில்களை தொடங்கவும், முதலீடுகளை செய்ய அழைப்பு விடுக்க சென்றுள்ள அவரின் பயணமும், நோக்கமும் மாபெரும் வெற்றியடைய மாவட்ட தி.மு.க நெஞ்சார்ந்த நன்றியும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

**கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம்!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உருவம் பொறித்த நூறு ரூபாய் நாணயத்தை வெளியிட்டு தந்தை பெரியாரின் சமுகநீதி, பேரறிஞர் அண்ணா அவர்களின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு வழிவந்த முதல்வர் கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சிக்கு கிடைத்த வெற்றியாகும். தமிழினத்திற்கும், தமிழ்நாட்டிற்கும் இப்பெருமையை பெற்று தர சீரிய முயற்சி எடுத்த கழக தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு மாவட்ட தி.மு.க நன்றியை தெரிவித்து கொள்கிறது.

அரசு பள்ளிகளில் 6 முதல் 12-ஆம் வகுப்பு வரை படித்த மாணவர்களின் உயர்கல்வியைத் தொடர மாதந்தோறும் ரூபாய் 1000 நிதியுதவி வழங்கும் தமிழ்ப்புதல்வன் திட்டத்தை அறிவித்து தேர்தல் அறிக்கையில் சொல்லததையும் செய்த கழகத் தலைவர் அவர்களுக்கு மாவட்ட தி.மு.க. நெஞ்சார்ந்த நன்றியும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

**கலைஞர் முழு உருவச் சிலை**

2024 ஆகஸ்ட் 15 அன்று முதல்வர் அவர்களின் சுதந்திர தின உரையில் ஏழை, நடுத்தர மக்களின் மருத்துவ செலவை குறைத்திடும் வகையில் முதல்வர் மருந்தகம் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவித்த கழக தலைவர் அவர்களுக்கு மாவட்ட தி.மு.க பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா, கழகத்தின் பவள விழாவை முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் அடங்கிய கும்முடிப்பூண்டி மற்றும் பொன்னேரி சட்டமன்ற தொகுதிகளில் கலைஞர் அவர்களின் முழுஉருவ வெண்கலசிலை அமைப்ப தெனவும் கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் திருகரங்களால் சிலையை திறந்து வைக்க கழக தலைவரை அழைப்பதெனவும் தீர்மானிக்கப்படுகிறது.

முப்பெரும் விழா, கழகத்தின் பவளவிழா, கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா தலைவர் முத்தமிழ் அறிஞர் 101 வது பிறந்தநாள் விழாக்களை முன்னிட்டு திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் முதல்வர் கழக தலைவர் அவர்களின் மூன்றாண்டு சாதனைகளை விளக்கி கிளைகள், வார்டுகள் தோறும் சுவர் விளம்பரம் செய்வதெனவும் தெருமுனை கூட்டங்கள் திண்ணை பிரச்சாரங்கள் மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்படுகிறது.

கழகத்தின் அனைத்து அமைப்புகளான ஒன்றிய, நகர மற்றும் பேரூர் கழகங்களின் பொது உறுப்பினர் கூட்டங்களை செப்டம்பர் மாதம் 11-ஆம் தேதிக்குள் நடத்தி மினிட் புத்தகத்தை தலைமை கழகத்திற்கு அனுப்பி வைத்திட வேண்டுமென கழகத்தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். பொது உறுப்பினர் கூட்டம் நடத்தி முடித்தவுடன் மினிட் புத்தகத்தை மாவட்ட கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும் எனவும், பொது உறுப்பினர் கூட்டங்களில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வாக்குச்சாவடி முகவர்கள் ஆகியோர் கட்டாயம் பங்கேற்பதை உறுதி செய்யவேண்டுமென கூட்டம் தீர்மானிக்கிறது.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் முப்பெரும் விழாவை முன்னிட்டு தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தழிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலைகளை பொலிவுபடுத்தியும் திருஉருவ படங்களை வைத்து அலங்கரித்து, கழக பாடல்களை ஒலிபரப்பி, நலத்திட்ட உதவிகள் வழங்குவதெனயும் கழக கொடிகம்பங்களுக்கு வண்ணம் பூசி, கழக கொடியேற்றுவதென தீர்மானிக்கப்படுகிறது.

**கழக மூத்த முன்னோடிகள் 1000 பேருக்கு பொற்கிழி**

கழகத்தின் பவள விழாவை முன்னிட்டு மாவட்டத்தில் உள்ள கழக மூத்த முன்னோடிகள் 1000 பேருக்கு கழகத் தலைவர் மற்றும் தமிழக முதல்வர் மற்றும் மாநில இளைஞர் அணி செயலாளர் ஆகியோரின் பொற்கரங்களால் பொற்கிழி வழங்குவதெனவும் தீர்மானிக்கப்படுகிறது.

வருகிற செப்டம்பர் 15-ஆம் தேதி சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள், கழக முன்னோடிகள் பெருந்திரளாக கலந்துகொள்வதுதெனவும், நடைபெறவுள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழக பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் முப்பெரும் விழாவில் பெருந்திரளாக கலந்து கொள்வதென வும் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கிறது.

இந்திய நாடாளுமன்றத்தின் 18-வது மக்களவை பொதுத் தேர்தலில் 'இந்தியா' கூட்டணி திருவள்ளூர் (தனி) தொகுதி வேட்பாளர் சசிகாந்த் செந்தில் அவர்களை கும்முடிப்பூண்டி மற்றும் பொன்னேரி தொகுதி 1,43,814 வாக்குகள் கூடுதலாக பெற்று வெற்றி பெற செய்த வாக்காள பெருமக்களுக்கும், வெற்றிக்கு அயராது உழைத்த மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், வாக்குச்சாவடிப் பாக முகவர்கள் அனைவருக்கும் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்வதோடு தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சசிகாந்த செந்தில் அவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துகொள்வதென தீர்மானிக்கப்படுகிறது.

இக்கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறை வேற்றப்பட்டன.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட

# ஒன்றிய - நகர - பேரூர்க் கழகங்களின் இளைஞர் அணி உறுப்பினர் சேர்ப்பு முகாம்கள்!



மாவட்டக் கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அறிவிப்பு

| நாள்/ நேரம் /கிழமை | முகாம் நடைபெறும் இடங்கள் |
|---|---|
| 2-9-2024 திங்கள் கிழமை மதியம் 12 மணி | திருத்தணி மேற்கு ஒன்றியம் |
| 2-9-2024 திங்கள் கிழமை மாலை 04 மணி | பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றியம் |
| 3-9-2024 செவ்வாய்க்கிழமை காலை 10 மணி | பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியம் |
| 3-9-2024 செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணி | பள்ளிப்பட்டு மத்திய ஒன்றியம் |
| 3-9-2024 செவ்வாய்க்கிழமை மதியம் 02 மணி | பள்ளிப்பட்டு பேரூர் |
| 3-9-2024 செவ்வாய்க்கிழமை மாலை 04 மணி | பொதட்டூர்பேட்டை பேரூர் |
| 9-9-2024 திங்கள் கிழமை காலை 10 மணி | திருவலாங்காடு கிழக்கு ஒன்றியம் |
| 9-9-2024 திங்கள் கிழமை மதியம் 12 மணி | திருவலாங்காடு மேற்கு ஒன்றியம் |
| 9-9-2024 திங்கட்கிழமை மாலை 3 மணி | பூண்டி மேற்கு ஒன்றியம் |
| 10-9-2024 செவ்வாய்க்கிழமை காலை 10 மணி | திருவள்ளூர் நகரம் |
| 10-9-2024 செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணி | கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் |
| 10-9-2024 செவ்வாய்க்கிழமை மாலை 3 மணி | கடம்பத்தூர் மேற்கு ஒன்றியம் |
| 11-9-2024 புதன்கிழமை காலை 10 மணி | திருத்தணி நகரம் |
| 11-9-2024 புதன்கிழமை மதியம் 12 மணி | ஆர்கே பேட்டை கிழக்கு ஒன்றியம் |
| 11-9-2024 புதன்கிழமை மதியம் 2 மணி | ஆர்கே பேட்டை மேற்கு ஒன்றியம் |
| 11-9-2024 புதன்கிழமை மாலை 4 மணி | திருத்தணி கிழக்கு ஒன்றியம் |

திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழகங்களில் உள்ள பல்வேறு இடங்களில் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை முகாம் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் ப.அப்துல்மாலிக், பிரபு கஜேந்திரன் ஆகியோர் மேற்பார்வையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம.கிரண் ஏற்பாட்டில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி.மோதிலால், டி.எம்.சுகுமாரன், டி.கே.பாபு, புவனேஷ்குமார், ஆர்.தீலிப் ஆகியோர் முன்னிலையில் மேற்கண்ட அட்டவணைப்படி நடைபெறவுள்ளது. அது சமயம் கழக கொள்கை பரப்பு செயலாளரும் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர்.எஸ். ஜெகத்ரட்சகன். திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம். பூபதி , மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன் , மாநில மாவட்ட நிர்வாகிகள் ஆர்.டி. இ. ஆதிசேஷன், ஓ.ஏ.நாகலிங்கம், மாஸ்டர். இ. குருதாஸ், டாக்டர் வி.சி.ஆர்.குமரன். பா.உதயமலர்பாண்டியன், சி.ஜெயபாரதி, எம்.மிதுன்சக்ரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம் வி.கிஷோர். மு.சுப்பிரமணியம் பி.ராஜேஸ்வரிரவீந்திரநாத், ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

**திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ**

செயலாளர் - திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.



சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்கு பகுதி,142 வது வட்ட திமுக சார்பில் 31.08.2024 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் சைதாப்பேட்டை கொத்தவால்சாவடி தெருவில் உள்ள பி.எஸ்.டி. திருமண மண்டபத்தில் வட்ட செயலாளர் எம்.நாகா தலைமையிலும் பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் பகுதி கழக நிர்வாகிகள் களக்காடி எல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், வி.பி.ஜானகிராமன் முன்னிலையிலும் வட்ட கழக செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பகுதி செயலாளரும், பத்தாவது மண்டலக்குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி ஆலோசனைகளை வழங்கினார். மாவட்ட துணைச் செயலாளர் வாசுகிபாண்டியன் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி துணை அமைப்பாளர்கள், கழக செயல்வீரர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# செயற்கை நுண்ணறிவு உலகையும் தமிழ் வெல்லட்டும்!

## 'கணையாழி' தலையங்கம்!

முத்தமிழ் அறிஞர் கலைஞர்
நூற்றாண்டு நினைவாக
நூறு ரூபாய் நாணயத்திலும்
'தமிழ் வெல்லும்!'

ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள
நாணயத்தில் 'தமிழ் வெல்லும்'
இடம் பெறச் செய்திருக்கிறார்
தமிழ்நாடு முதல்வர்!

சங்க காலம் முதலே
தமிழர்களுக்கு இருந்திருக்கிறது நாணயம்!

சங்க இலக்கியங்களிலும்
அணிகலனாகக் காசு!
நாள், மலர், காசு, பிறப்பு என்று
வெண்பாவின் இறுதிச் சீர் வரிசையிலும் காசு!

இப்போதும் பலர்
வீட்டுத் திருமணங்களின்
சீர் வரிசையில் காசு!

உலகில் தொன்மையான
முத்திரை நாணயம்
கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கு உரியது.
அந்தக் கால நாணய வரலாற்றுக்குப்
பங்களிக்கும் இடங்களாகத்
தமிழ் நாட்டில் கீழடியும் கொடுமணலும்!.

பிறகு வந்த நாணயங்களில்
அரசனின் பெயரும் சின்னமும்!
விஜய நகர ஆட்சிக்கு முன்புவரை
நாணயத்தில்
கடவுள் இருந்ததாகத் தெரியவில்லை.

இப்போது நாடும் சின்னமும் எழுத்துமாக
உலகெங்கும் நாணயங்கள்!

நாணயங்களில் மொழி இருக்கும்
ஆனால்
நாணய வரலாற்றில் எங்கேயும்
இதுவரை தன் மொழி வெல்லும் என்ற
பிரகடனம் இடம்பெறவில்லை
சாதித்திருக்கிறார் தமிழ்நாடு முதல்வர்!

நாணயம் வெளியிடும் அதிகாரம்
மாநில அரசிடம் இல்லாத போதும்
தமிழ் வெல்லும் என்று
ஒன்றிய அரசையே
சொல்ல வைத்திருக்கிறார்!

தனிப்பட்டவர்களின்
சொல்லில் அடைபட்டுக் கிடந்த அறிவு
அவருக்குப் பின்பும் பயன்பட
எழுத்தில் தன் ஆயுட் காலத்தை
ஏற்றிக் கொண்டது.

அச்சு வாகனத்தில் வந்த அறிவு
எல்லை கடந்து இப்போது
எல்லோருக்கும் பயன்பட
இணையத்தில் வருகிறது!

உரிமைத் தொகை வேண்டாமல்
கலைஞர் நூல்களை நாட்டுடைமை ஆக்கி.
அறிவைப் பொதுவுடைமை ஆக்கி இருக்கிறார்!
நாட்டுடைமையான
முத்தமிழ் அறிஞரின் படைப்புகள்
உலகில் எந்த நாட்டிலிருந்தும்
எந்த நேரத்திலும் படிக்க
இணையத்தில் கிடைக்கப் போகின்றன..

அறிவு என்றாலே செயற்கைதான்
ஆனால்
செயற்கை நுண்ணறிவு
தனிப்பட்ட மனிதனை மிஞ்சிய
அறிவின் கருவூலம்!
ஏனெனில்
இலட்சக் கணக்கான ஆண்டுகளாக
வளர்ந்து வரும் மரபு அணுக்களைக் கொண்ட
கோடிக்கணக்கான மக்களின்
மூளைகளின் சிந்தனை அது.

பார்க்கவும் கேட்கவும்
புரிந்து கொள்ளவும்
பதில் சொல்லவும்
சொன்னதைச் செய்யவுமாக
இணைய உலகில் நிறைய செயலிகள்!

எப்போதும் தன்னைப்
புதுப்பித்துக் கொள்ள
எல்லாவற்றிலிருந்தும் கற்றுக்கொள்கிறது.

அதற்கென்று தனியாக
எதுவும் தெரியாது.
ஆனால் என்ன கேட்டாலும்
யாரை விடவும் கூடுதலாக
அதற்குப் பதில் தெரிகிறது!

உரையாடுகிறது.
சொன்னால் கவிதை கட்டுரை எழுதுகிறது.
மொழிபெயர்க்கிறது.

ஆனால் அதற்கென்று தனியாகத்
தாய்மொழி ஏதும் இல்லை
ஆனாலும்
கேட்கும் மொழியில்
அரசியலோ ஆதிக்கமோ இல்லாமல்
பதில் சொல்லத் தெரிந்திருக்கிறது.
சீனாவில் பல மருத்துவ மனைகளில்
இப்போதே பணிபுரிகிறார்கள்
இயந்திர மனிதர்கள்!

சீன மொழியின்
வட்டார வழக்கையும் புரிந்து
நோயாளிகளுக்குப் பதில் சொல்கின்றனவாம்
ரோபோக்கள்!

குழந்தையை ரோபோவிடம் விட்டுவிட்டு
அலுவலகம் செல்லப் போகிற
காலம் வந்துகொண்டிருக்கிறது!
இனிவரும் காலங்களின்
மக்கள்தொகைக் கணக்கெடுப்பில்
இயந்திர மனிதர்களுக்கும்
இடம் இருக்கும் போல!

இது அறிவின் விடுதலைக் காலம்
உயிரினங்களில்
மனிதனை உயர்த்தி வைத்திருப்பது அறிவு.

அறிவின் பரிணாமத்தில்
நெருப்பு, மின்சாரம், இணையம் கடந்து
இப்போது செயற்கை நுண்ணறிவு!

தமிழ்ப் பாடப் புத்தகத்திலும்
செயற்கை நுண்ணறிவுக்கு
இடம் கிடைத்திருக்கிறது தமிழ் நாட்டில் !

இப்போது உலகை ஆள்வது
அதிகாரம் இல்லை
அறிவு!
வரும் காலத்தில் இனி ஆளப் போவது
செயற்கை நுண்ணறிவு!

அறிவு, பாதுகாக்கும்;
பகைவர்களும் அழிக்க முடியாத அரணாகும்.
அதனால் அறிவுடையார் ஆவது அறிவார் என்று
திருவள்ளுவர் சொல்கிறார்!

இதோ முதல்வரை வரவேற்க
மைக்ரோ சாப்ட்
தலைமையகத்திலும் தமிழ்!

கூகுள் நிறுவன
செயற்கை நுண்ணறிவு ஆய்வகங்கள்
தமிழ்நாட்டில்!

தமிழ்நாடு முதலமைச்சர்
நம்பிக்கை தந்திருக்கிறார்.

இனி
செயற்கை நுண்ணறிவு உலகையும்
தமிழ் வெல்லட்டும்!

அன்புடன்
ம.ரா.



-நன்றி
'கணையாழி'
செப்டம்பர் - 2024